
# நல்லூர்க் கந்தன் திருவமுதத் தேன்துளிகள்



'மெய்கண்டான்' அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அல்லல் தீர்க்கும் நல்லைக் கந்தனை அநுதினமும்
அல்லும் பகலும் நினைந்து நினைந்து கசிந்துருகி
செல்வா, குமரா, செவ்வேள் முருகா என நினைந்து
உள்ளும் அடியார்க் கிந்நூல் என்றும் உரியதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# நல்லூர்க் கந்தன்

# திருவமுதத் தேன் துளிகள்

இஃது
யாழ்ப்பாணத்து, நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
தேர்த் திருவிழாவன்று, மெய்யடியார்களுக்கு
மெய்கண்டான் அன்பளிப்பாக
வழங்கப்பெற்றது.

—


**மெய்கண்டான் அச்சியந்திரசாலை**

161, செட்டியார் தெரு,
கொழும்பு.

கிளை: ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

# மெய் இன்பம்

ஈழத்தில் முருகவேள் கோயில் கொண்டருளிய திருப்பதிகளுள் தெற்கே கதிர்காமமும், வடக்கே நல்லூர் நற்றலமும் அருளாலும் புகழாலும் கடல் கடந்து பிரசித்தி பெற்றவையாகும்.

தென் கதிரைப் பதியைச் சிறப்புள்ள சிங்கள மன்னர்கள் போற்றிப் பணிந்து தம் பண்டைய ஆட்சியையும் அரசையும் நடாத்தியதாக மகாவம்சம்போன்ற சரித்திர நூல்கள் கூறுகின்றன. அதுபோலவே நல்லைக் கந்தனை நாள்தவருது வணங்கி வடபால் வாழ்ந்த ஆரியச் சக்கரவர்த்திகளும் சங்கிலிய மாமன்னன்போன்ற செந்தமிழ் வீரர்களும் தத்தம் வல்லமை பொருந்திய நல்லாட்சியை நடாத்தினர் என்று யாழ்ப்பாண வைபவம் கூறும் வரலாற்று நூல்கள் குறிக்கின்றன.

இங்ஙனம் வரலாற்றுப் பெருமை வாய்ந்த நல்லையம்பதி அடியார்தம் வல்வினை போக்கி நல்வரமருளும் திருப்பதியாகத் தொன்று தொட்டு விளங்கி வருகின்றது. வருடா வருடம் ஆவணித் திங்களில் வரும் திருவிழாக்காலங்களில் ஆயிரமாயிரம் தொண்டர்களும் பக்தர்களும் தெண்டனிட்டு, கலியுக வரதனின் திருவருள் யாசித்து நிற்கும் திருக்காட்சி பரவசமூட்டுவதாகும்.

வேண்டுவார் வேண்டுவன வேண்டு மட்டும் ஈயும் விண்ணோர்கள் சிறைமீட்ட வேலனின் திருப்புகழை, வாக்கும் மனமும் நிறைந்து, நோக்கும் விழியும் கனிந்து, பாடிக் களித்து, தேடிச் சரணடைய இந்நூலில் காணப்படும் திருவமுதத் தேன் துளிகள் பயன்பட்டால், அதுவே மெய்கண்டான் கண்ட மெய் இன்பமாக அமையும் என்று கருதுகிறோம்.

ஆ. கந்தையா
(ஸ்தாபகர்)

"மெய்கண்டான்"
கொழும்பு-யாழ்ப்பாணம்
சுபகிருது-ஆவணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன்
# திருவமுதத் தேன் துளிகள்

## நல்லைப் பெருமானே

ஊனாய், உயிராய், உலகமெலாம்
        ஒளிரும் கருணைப் பேரிறைவா!
கோனாய்த் தமிழர் குலங்காக்கும்
        குமரா, பரம குருதேவா!
வானோர் பணியும் படைத்தலைவா!
        வள்ளி படரும் மலைக்கிழவா!
தேனார் நல்லைப் பதிவாழும்
        செல்வக் குமரப் பெருமானே.

இறைஞ்சித் தொழுவார்க் கிரங்கி, மன
        விருளைக் கடிந்துள் ளொளிபெருக்க
வருஞ்சித் திரவேல் விழிச்சுடரே!
        வளர்செந் தினைத்தேன் வள்ளிமகிழ்
குறிஞ்சிக் கிழவா! அசுரகுணக்
        குலத்தை யழித்துன் குரைகழலை
இறைஞ்சிப் பெருவாழ் வுறவருளாய்,
        எந்தாய், நல்லைப் பெருமானே

அன்புள் ளுருகி, அடியரெலாம்
        அரோக ராவென் றார்ப்பரித்து,
இன்பக் கடலில் திளைத்தாடும்
        இயல்பைக் கண்டும், எளியமனம்,
பெண்பால், பொருள்பால், காட்சியின்பால்,
        பெயர்த்தும் செல்லா தொழிந்திலவே;
என்பாற் சற்றும் உனக்கிரக்கம்
        இலையோ? நல்லைப் பெருமானே.

அருளால் உலகைத் தாங்கிவரும்
        அப்பன் மகிழப் பிரணவத்தைக்
குருவா யமர்ந்து அருள்புரிந்த
        குகனே! முந்தைக் கொடியவினை
இருளிற் கிடந்து கரைகாணு
        தேங்கும் அபலை உய்யவருட்
குருவாய் வந்தா லாகாதோ?
        குமரா, நல்லைப் பெருமானே. —பரமஹம்ச தாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சும் குழந்தை வடிவேல்

கொஞ்சும் குழந்தை வடிவேல்;—தீயர்
கொட்ட மடக்கக் கொதிக்கும் தழல்வேல்
தஞ்சருக் கஞ்சல் தரும்வேல்;—ஆத்ம
தாகம் தணித்திடும் தியாகப் புனல்வேல்! (கொஞ்சும்)

ஆறு முகங்கொண்ட சீர்வேல்;—வஞ்சர்க்
கஞ்சு முகந்தந்து துஞ்சிக்கும் கூர்வேல்,
ஏறு நடைகொண்ட போர்வேல்;—தெய்வம்
இல்லையென் பாருள்ளும் துள்ளும் உயிர்வேல்!
(கொஞ்சும்)

உண்மை உணர்த்தும் ஒளிவேல்;—தவம்,
ஊக்கம், முயற்சி, உழைப்பிற் குளிர்வேல்;
திண்மை வளர்க்கும் ஜெயவேல்;—இளஞ்
சிங்கத் தமிழ்நெஞ்சிற் பொங்கும் திறல்வேல்!
(கொஞ்சும்)

அண்டம் சுழற்றும் அணுவேல்;—சச்சி
தானந்த மாய்நிறை மோனக் குகவேல்!
தொண்டருக் குற்ற துணைவேல்;—உயிர்
தோறும் கலந்தருட் பேறு தரும்வேல்! (கொஞ்சும்)

கண்டவர் உள்ளம் கவர்வேல்;—வழி
காணு தவர்க்கொளி காட்டும் விழிவேல்!
விண்டிட வொண்ணு விறல்வேல்;—அன்பு
வீறுகொண் டாருளத் தூறும் சுவைவேல்! (கொஞ்சும்)

—பரமஹம்சதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடிவேலுடனே வருவாய்

பல்லவி

முருகா—முருகா—முருகா

சரணங்கள்

வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும்.

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே!

சுருதிப் பொருளே, வருக!
துணிவே, கனலே, வருக
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்

அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வே லவனே, சரணம்.

அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய், அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்.

குருவே, பரமன் மகனே,
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
சமராதிப னே, சரணம் சரணம்.

—அமரகவி பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் உன்னுள் அடக்கம்

தரணிதனி லாறுபத் தறுகோடி தீர்த்தமுன்
சரவணத்துள் அடக்கம்
சாற்றுமோ ரெழு கோடி மந்திரங்களு முன்
சடா க்ஷரத்துள் அடக்கம்
விரதமிகு நவகோடி சித்தர்களு முனது சுப
வீக்ஷணந்தனி லடக்கம்
மேலான தேவாலயங்களு முன் ஆறுபடை
வீட்டினிற்குள் அடக்கம்.
இரவிமுதல் முப்பத்து முக்கோடி தேவருமுன்
இதய கமலத் தடக்கம்
ஈரேழு புவனமுத லண்டங்கள் பலவுமுன்
னிடத்தினி லடக்கமையா
வரிசைமிகு பக்தஜன பரிபாலனு மோக
வள்ளி குஞ்சரி மணாளா
வனஜமல ரயன்மதனையருள்சரச கோபால
மருக சரவண முருகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகத் தெய்வமணியே

ஒருமையுடனினதுதிருமலரடிநினைக்கின்ற

உத்தமர்தம்உறவுவேண்டும்

உள்ளொன்றுவைத்துப்புறம்பொன்றுபேசுவார்

உறவுகலவாமைவேண்டும்

பெருமைபெறும்நினதுபுகழ்பேசவேண்டும்பொய்மை

பேசாதிருக்கவேண்டும்

பெருநெறிபிடித்தொழுகவேண்டும்மதமானபேய்

பிடியாதிருக்கவேண்டும்

மருவுபெண்ணாசையைமறக்கவேண்டும்உனை

மறவாதிருக்கவேண்டும்

மதிவேண்டும்நின்கருணைநிதிவேண்டும்நோயற்ற

வாழ்வுநான்வாழவேண்டும்

தருமமிகுசென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்

தலமோங்குகந்தவேளே

தண்முகத்துய்யமணிஉண்முகச்சைவமணி

சண்முகத்தெய்வமணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் உண்டே துணை

நேரிசை வெண்பா

குன்றம் எறிந்தாய்! குரைகடலிற் சூர்தடிந்தாய்!
புன்தலைய பூதப் பொருபடையாய்!—என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய் என் உள்ளத்து உறை.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தில்வாழ் வே!

அஞ்சு முகம்தோன்றின் ஆறு முகம்தோன்றும்;
வெஞ்சமரில் 'அஞ்சல்!' என வேல்தோன்றும்;—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
'முருகா!' என்று ஓதுவார் முன்.

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே!—ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா!—பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடங்காண்; இரங்காய் இனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகமான பொருள்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடுசூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணசலம் அமர்ந்தபெரு மாளே.

★

# திருப்புகழ்

நினைத்த தெட்டனையிற் றவறுமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமல்
கனத்த தத்துவமுற் றழியாமற்
கதித்த நித்தியசித் தருள்வாயே
மனித்தர் பத்தர்தமக் கெளியோனே
மதித்த முத்தமிழிற் பெரியோனே
செனித்த புத்திரரிற் சிறியோனே
திருத்த ணிப்பதியிற் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதித்தனன் உலகம் உய்ய

அருவமுமுருவுமாகியனாதியாய்ப்பலவாயொன்றாய்ப்
பிரமமாய்நின்றசோதிபிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர்முகங்களாறுங்கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்குதித்தனனுலகமுய்ய

மாயையின் வலியோனாகிமான் முதலோரைவென்றே
ஆயிரத்தோரெட்டண்டம் அரசுசெய் துகநூற்றெட்டுக்
காயமதழிவின்றாகிக்கடவுளர்க்கலக்கண்செய்த
தீயசூர்முதலைச் செற்றகுமரன்றாள் சென்னிவைப்பாம்

புன்னெறியதனிற்செல்லும்போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறியொழுகச்செய்து நவையறுகாட்சிமல்கி
என்னையுமடியனாக்கியிருவினை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள் வள்ளல்பாதபங்கயங்கள் போற்றி

மூவிருமுகங்கள்போற்றி முகம்பொழிகருணைபோற்றி
ஏவருத்துதிக்கநின்றவீராறுதோள்போற்றி காஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேண்மலரடிபோற்றி யன்னான்
சேவலுமயிலும்போற்றி திருக்கைவேல்போற்றிபோற்றி

ஆறிருதடந்தோள்வாழ்க ஆறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்கக் குக்குடம்வாழ்கச் செவ்வே
ளேறியமஞ்ஞைவாழ்க யானைதன் னணங்கும்வாழ்க
மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீரடியாரெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அலங்காரம்

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே

கோழிக் கொடியன் அடிபணி யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி காள்உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்கள் அத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் அடிப்பிறகே

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள் நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்போல்
கையிற்பொருளும் உதவாது காணுங் கடைவழிக்கே

திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்று ஓதுங் குவலயமே

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேல்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே

பேற்றைத் தவஞ்சற்றும் இல்லாத என்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அநுபூதி

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியார் அறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனமே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே

ஆதா ரமிலேன் அருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவிநோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா எனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் வாழ்த்து

வேல்வாழி! மயில்வாழி! சேவல் வாழி!
வேறுமுள படைவாழி! விளங்கு தண்டைக்
கால்வாழி! அருள்பொழியும் விழிகள் வாழி!
கவின்குலவு மீராறு கரங்கள் வாழி!
மால்வாழி வாழியெனப் பணிந்துவாழ்த்தும்
மலைமாது தருமுருகன் மகிழ்ந்த வாறு
பால்வாழி யெனையாளுங் கருணை வாழி!
பங்கிருந்த மங்கையர் தம் பதங்கள் வாழி!

ஆதி வாழிய! அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய! புண்ணியர் வாழிய!
நீதி வாழிய! நீள்புவி வாழிய!
கோதில் சைவக் குலமிக வாழியே!

துய்யதா மறைக ளாலுந் துதித்திட வரிய தான
செய்யவே ளடிகள் வாழ்க! சேவலும் மயிலும் வாழ்க!
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க! அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க! வாழ்கவிப் புவன மெல்லாம்!

ஆறிரு தடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க! யானை தன் அணங்கும் வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க! வாழ்கசீ ரடிய ரெல்லாம்!

அந்தமி லொளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் ணின்றும் வந்த இயற்கையாற் சத்தி யாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளங் கவலை தீர்ந்தேம்.

ஆறுமா முகப்பிரா னன்றி யிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத்
தேறின னவனடி சிந்தை செய்தனன்
மாறிழி யருவிநீர் வழியுங் கண்ணினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்கள்
எங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே,

நண்ணினர்க் கினியா யோலம்! ஞானநா யகனே யோலம்!
பண்ணவர்க் கிறையே யோலம்! பரஞ்சுடர் முதலே யோலம்!
எண்ணுதற் கரியா யோலம்! யாவையும் படைத்தா யோலம்!
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோல மோலம்!

தேவர்கள் தேவே யோலம்! சிறந்தசிற் பரனே யோலம்!
மேவலர்க் கிடியே யோலம்! வேற்படை விமலா வோலம்;
பாவலர்க் கெளியா யோலம்! பன்னிரு புயத்தா யோலம்!
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோல மோலம்!

துய்யதோர் மறைக ளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க! சேவலும் மயிலும் வாழ்க!
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க! அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க! வாழ்கவிப் புவன மெல்லாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி
மகா வித்வான்
ஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்ற

## சுப்பிரமணிய பராக்கிரமம்

இந்நூல் சைவமக்கள் யாவருக்கும் உபயோகமாகும் பொருட்டு முருகனின் எண்பத்தெட்டு பராக்கிரமங்களையும் 160 வடமொழி, தமிழ் நூல்களில் எடுத்து ஆக்கப்பெற்றது.
பல அழகிய படங்களுடன் கூடியது.
400 பக்கங்கள் கொண்டது.
முருகனின் அழகிய கலர் முகப்புடன்
அழகிய அட்டை பைன்ட் செய்யப்பெற்றது.

விலை ரூ. 5-00 தபாற் செலவு 60 சதம்

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு, கொழும்பு.

உயிருள்ளவை போன்ற
போட்டோக்களுக்கு
"செல்லம்ஸ்" ஸ்ருடியோ
கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

FOR LIFELIKE SNAPS
IN PHOTOGRAPHY
*Visit*
"SELLAMS" STUDIO
Kasthuriyar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்கண்டான்

- ★ திருக்குறட் கலண்டர் No. 1
- ★ நன்மொழிக் கலண்டர் No. 2
- ★ இங்கிலிஷ் கலண்டர் No. 3
- ★ மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்)
- ★ ரேபிள் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்)
- ★ தகரப் படங்கள் (அழகிய 15 மாதிரிகள்)
- ★ No. 1 தமிழ் டயறி
- ★ No. 2 திருக்குறள் டயறி
- ★ No. 3 டெஸ்க் டயறி
- ★ No. 4 இங்கிலிஷ் டயறி (பக்கம் 2 நாள்)
- ★ இங்கிலிஷ் டயறி No. 5 (ஒரே நோக்கில் ஒரு வாரம்)
- ★ பிஸ்னஸ் (Business) டயறி No. 6 (பக்கம் ஒரு நாள்)
- ★ ரேபிள் டயறி (பக்கம் 1 நாள்)
- ★ புல்ஸ்காப் டயறி (பக்கம் 1 நாள்)
- ★ பிளாஸ்ரிக் மணிபேர்ஸ் (பல ரகங்களில்)

**இவையெல்லாம் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

மேற்கண்ட டயறிகளில், சாதாரண டயறிகள், றெக்சின் டயறிகள், பிளாஸ்ரிக் டயறிகள், பேர்ஸ் டயறிகளும் உண்டு.

செப்டம்பர் மாதத்தில் முற்பணத்துடன் ஆடர் செய்தால் விசேஷ ரொக்கப் பரிசுகள், இனும் கலண்டர்கள் பெறுவீர்கள்.

விபரங்களுக்கு:

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**

161, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு, மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org